# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 101/மா/2024**

**நாள்: 17.03.2025**

| | | |
|---|---|---|
| திரு. M.R.ஆதி அண்ணாச்சி<br>திண்டுக்கல் | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>திண்டுக்கல் மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

திண்டுக்கல், நாகல் நகர், குரு நகர், எண்.66 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.M.R.ஆதிஅண்ணாச்சி என்பவரின் 18.01.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.01.2024 அன்று பெறப்பட்டு 101/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

திண்டுக்கல், நாகல் நகர், குரு நகர், எண்.66 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.M.R.ஆதி அண்ணாச்சி என்பவர் தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"திண்டுக்கல், நாகல் நகர், சந்தைரோடு, சந்தனக்காரத் தெருவில் 150 ஆண்டுகள் பழமையான கேணி உள்ளது. 2014 ஆம் ஆண்டு இந்த கேணியை ஒட்டி திரு. கணேசன் என்பவர் வீடு அமைந்துள்ளது. திரு. கணேசன் வீடு கட்டும் பொழுது வீணான செங்கல், மணல் ஆகியவற்றைக் கொண்டு மேற்படி கிணற்றை மூடி அழித்து விட்டார். எங்களது புகாரினை தொடர்ந்து திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அந்த கிணற்றை தூர் வார அனுமதி அளித்தார். ஆனால், திரு. கணேசன் மேற்படி கிணற்றினை ஆக்கிரமிப்பு செய்து மணல் போட்டு கிணற்றினை மூடிவிட்டார். இதுபற்றி கேட்டபொழுது, அந்த கிணறு தனக்கு சொந்தமானது என்றும், எத்தனை முறை தூர் வாரினாலும், அதனை மணல் போட்டு மூடுவேன் என்று கூறினார். எனவே, அரசுக்கு சொந்தமான தூர் வாரிய கிணற்றினை ஆக்கிரமிப்பு செய்த திரு. கணேசன் மீது நடவடிக்கை எடுக்கவும், அந்த கிணற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்."

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 16.08.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 10.09.2024 நாளிட்ட அறிக்கையில்:

"திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6, பிளாக் எண்.11, நகரளவு எண்.681, சந்தனக்காரத் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான கிணற்றினை அதன் முன் வீட்டிலுள்ள திரு. ஆர். கணேசன் த/பெ ராஜாராம் என்பவர் கட்டிட கழிவுகளை கொட்டி ஆக்கிரமிப்பு செய்து பயன்பாடின்றி கிணற்றை மூடி விட்டார் என

தெரிவிக்கப்பட்டதையடுத்து, கடந்த 16.12.2022 அன்று மேற்படி திரு. கணேசன் என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. மேலும், மாநகராட்சி பொறியியல் பிரிவு வாயிலாக பயன்பாடின்றி மூடப்பட்ட கிணறு முழுவதும் தூர்வாரப்பட்டு கிணற்றின் மேல் இரும்பு கிரில் கொண்டு மூடப்பட்டுள்ளது. அதற்கான புகைப்பட நகல் இணைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.''

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 13.02.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.02.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 13.02.2025 அன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6.திண்டுக்கல் மாநகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் 13.02.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6, பிளாக் எண்.11, நகரளவு எண்.681, சந்தனக்காரத் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான கிணற்றினை அதன் முன் வீட்டிலுள்ள திரு. ஆர். கணேசன் த/பெ ராஜாராம் என்பவர் கட்டிட கழிவுகளை கொட்டி ஆக்கிரமிப்பு செய்து பயன்பாடின்றி கிணற்றை மூடி விட்டார் என தெரிவிக்கப்பட்டதையடுத்து, கடந்த 16.12.2022 அன்று மேற்படி திரு. கணேசன் என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு அங்கு தகரத்தால் அமைக்கப்பட்டிருந்த கொட்டகை ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு விட்டது. மேலும், மாநகராட்சி பொறியியல் பிரிவு வாயிலாக பயன்பாடின்றி மூடப்பட்ட கிணறு முழுவதும் தூர்வாரப்பட்டு கிணற்றின் மேல் இரும்பு கிரில் கொண்டு மூடப்பட்டுள்ளது. அதற்கான புகைப்பட நகலினை இம்முறைமன்றத்தில் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கிடும் வகையில் 25.02.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.02.2025 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

8. மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகாமல், 24.02.2025 நாளிட்ட தனது கடிதத்தில் பின்வருமாறு வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

(1) திண்டுக்கல் டவுன், நகரளவை எண்.681ல் சந்தனக்காரத் தெருவில் 150 ஆண்டுகள் பழமையான கிணறு உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்தி வந்தனர்.

(2) கிணற்றின் அருகே கணேசன் என்பவர் வீடு உள்ளது. மேற்படி கணேசன் வீடுகட்டும் பொழுது வீணான பழைய செங்கல், மணல் ஆகியவற்றினை கிணற்றில் கொட்டி நீர் நிலையை அழித்துள்ளார்.

(3) மேற்படி கிணற்றினை பயன்பாட்டிற்கு கொண்டு வர லஞ்ச ஒழிப்புக் கழகம் தூர் வார மாவட்ட ஆட்சியர் பரிந்துரையின் பேரில் மாநகராட்சி ஆணையர் 15.11.2017 அன்று தூர் வார அனுமதி கடிதம் அளித்தார்.

(4) நாங்கள் 15 அடி ஆழம் வரை தூர் வாரினோம். மாவட்ட ஆட்சியரும், ஆணையரும் பார்வையிட்டு பாராட்டு தெரிவித்தனர்.

(5) மீண்டும் கல்நெஞ்சம் படைத்த கணேசன் கிணற்றினை ஆக்கிரமித்து கட்டிட பொருள்கள் வீணானதை கொண்டு மீண்டும் கிணற்றினை மூடிவிட்டார்.

(6) 17.11.2022 அன்று நான் கணேசனிடம் கிணறு குறித்து கேட்டதற்கு கொலை மிரட்டல் விடுத்தார்.

(7) அதனால் கணேசன் மீது நடவடிக்கை எடுத்து கிணற்றை தூர் வார நடவடிக்கை எடுக்குமாறு 21.11.2022 அன்று எதிர்மனுதாரருக்கு புகார் மனு அளித்தேன். நடவடிக்கை இல்லை.

(8) 27.08.2024 அன்று கிணறு தூர் வாரப்பட்டதாகவும், கணேசனின் ஆக்கிரமிப்பு 80'' x 80" செட் அகற்றப்பட்டதாகவும், கிணற்றை சுற்றி பாதுகாக்க **Fencing** அமைக்க பொறியியல் பிரிவு மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்மனுதாரர் எனக்கு பதில் அறிக்கை அனுப்பினார்.

(9) 04.12.2024 அன்று காலை 9.15 மணி அளவில் கிணற்றினை பார்வையிட சென்ற என்னை கணேசனும், அவரது மகனும் வளர்த்து வந்த நாயை ஏவிவிட்டு என்னை கடிக்க வைத்து கொடூர தாக்குதல் நடத்தினார்கள்.

(10) திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய அதிகாரிகள் கணேசன், அவரது மகன் பிரதீப் மீது Cr. No.408/2024ன்படி FIR பதிந்து உள்ளார்கள்.

(11) கிணற்றினை சுற்றி பாதுகாப்பு சுவர் (Fencing) இல்லாததால் தான், கணேசன் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகிறார். கிணற்றினை பயன்படுத்தும் பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று கூறி 31.12.2024 அன்று பதிவு தபால் மூலமாக எதிர்மனுதாரருக்கு புகார் மனு அனுப்பியிருந்தேன்.

(12) 31.12.2024ம் தேதிய புகார் மனுவை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் நாளது தேதிவரை கேணியை சுற்றி Fencing அமைக்கவே இல்லை.

(13) 21.12.2022 தேதிய புகார் மனுவின்படி மேற்படி கணேசன் மீது எதிர்மனுதாரர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை

(14) கிணற்றில் தூர் வாரியும், கிணற்றிற்கு இரும்பு சல்லடை மூடி மட்டுமே அமைத்துள்ளார். எதிர்மனுதாரர் கிணற்றினை சுற்றி Fencing அமைக்கவில்லை. கணேசன் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அரசுக்கு சொந்தமான கிணற்றில் ஆக்கிரமிப்பு செய்த கணேசன் மீது குற்றவியல் நடவடிக்கையை எதிர்மனுதாரர் மேற்கொண்டிருக்க வேண்டும். நாளது தேதிவரை தவிர்த்து வருவது வேதனையைத் தருகிறது. எனவே கிணற்றினைச் சுற்றி Fencing அமைத்தும், கணேசன் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்து அரசு சொத்தினை பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால் பொதுமக்களாகிய எங்களுக்கு மிகுந்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும்.

எனவே, சமூகம் அவர்கள் கிணற்றினைச் சுற்றி Fencing அமைக்கவும், கணேசன் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக் கோரியும், கணேசன் மீது நடவடிக்கை எடுக்காமலும், **Fencing** அமைக்காமலும் காலதாமதப்படுத்தி வருகின்ற மாநகராட்சி ஆணையராகிய எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்குமாறும், மனுவின் படி உத்தரவு பிறப்பிக்க வேண்டியது நியாயமும் அவசியமாகவும் இருக்கிறது.''

**9.** மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது 24.02.2025 நாளிட்ட நிரூபண வாக்குமூலம் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களின் அறிக்கை, நகரமைப்பு ஆய்வாளர் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், திண்டுக்கல், நாகல் நகர், சந்தைரோடு, சந்தனக்கார தெரு வார்டு எண்.6, பிளாக் எண்.11, நகரளவு எண்.681–ல் இருக்கும் அரசுக்கு சொந்தமான கிணற்றினை தூர் வாரி, அதனை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியும், அதனைச் சுற்றி Fencing அமைக்கும்படியும், அக்கிணற்றினை ஆக்கிரமிப்பு செய்த திரு. கணேசன் என்பவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில் தூர்வாரப்பட்ட கிணறு மீண்டும் திரு.கணேசன் என்பவரால் ஆக்கிரமிக்கப்பட்டதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6, பிளாக் எண்.11, நகரளவு எண்.681, சந்தனக்காரத் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான கிணற்றினை அதன் முன் வீட்டிலுள்ள திரு. ஆர். கணேசன் த/பெ ராஜாராம் என்பவர் கட்டிட கழிவுகளை கொட்டி ஆக்கிரமிப்பு செய்து

பயன்பாடின்றி கிணற்றை மூடி விட்டார் என்பதும், கடந்த 16.12.2022 நாளிட்டு திரு. ஆர். கணேசன் என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது எனவும், மேலும், மாநகராட்சி பொறியியல் பிரிவு வாயிலாக பயன்பாடின்றி மூடப்பட்ட கிணறு முழுவதும் தூர்வாரப்பட்டு கிணற்றின் மேல் இரும்பு கிரில் கொண்டு மூடப்பட்டுள்ளது என்பதும், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட அரசு சொத்து மற்றும் நீர் ஆதாரமான கிணற்றினை மீண்டும் ஆக்கிரமிப்பு செய்து பொது மக்கள் பயன்படுத்த இயலாமல் செய்வது அரசு இயந்திரத்தின் செயல்பாடு மற்றும் சட்டத்தினை அலட்சியம் செய்வதாகும். எனவே, இது தொடர்பாக அரசு வழக்கறிஞரை கலந்து ஆலோசித்து, வழக்கறிஞரின் அறிவுரைபடி ஆக்கிரமிப்பாளர் மீது சட்ட நடவடிக்கை தேவைபடின், தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், வருங்காலத்தில் அக்கிணறு ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்க மேற்படி கிணற்றைச் சுற்றி **Fencing** அமைக்குமாறு, சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்திரவிடுமாறும், மூன்று மாதத்திற்கு பின்னர் கள ஆய்வு மேற்கொண்டு ஆக்கிரமிப்பு இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு மார்ச் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M. R. ஆதி அண்ணாச்சி,
த/பெ.R.M.ராஜீ,
எண்.66 குரு நகர், நாகல் நகர் (PO),
திண்டுக்கல்–624 003.
2) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்–624 001.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.
4) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032